| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | **வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**<br>இணைந்து வழங்குபவர்கள்<br>**பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை**<br>**ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும்**<br>**ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்** | | | | | |
| MSSRF Science for Sustainable Development | மாவட்டம் : | **இராமநாதபுரம்** | காலம் : | **28/06/2017** | முதல் | **02/07/2017** |
| | அறிக்கை எண் : | **051/ 2017** | வெளியீட்டு நாள் : | | **27/05/2017** | |

| கடந்த கால வானிலை 23/06/2017 முதல் 26/06/2017 வரை | |
|---|---|
| **காரணிகள்** | **கடந்த கால வானிலை** |
| மழை (மி.மீ) | 2.8 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 34-38 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 27-28 |
| மேக மூட்டம் | 4-8 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 63-82 |
| காற்றின் வேகம்(கி.மீ. / மணி) | 8-10 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை** ( 02-07-2017 8.30 மணி வரை )

| **காரணிகள்** | **28-06-2017** | **29-06-2017** | **30-06-2017** | **01-07-2017** | **02-07-2017** |
|---|---|---|---|---|---|
| | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
| மழை (மி.மீ) | 1 | 0 | 0 | 6 | 0 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 35 | 35 | 36 | 36 | 36 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 25 | 25 | 26 | 26 | 26 |
| மேக மூட்டம் | 6 | 6 | 6 | 8 | 8 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 75 | 75 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 50 | 50 | 55 | 55 | 55 |
| காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 16 | 16 | 14 | 14 | 14 |
| காற்றின் திசை | தென்மேற்கு | தென்மேற்கு | தென்மேற்கு | தென்மேற்கு | தென்மேற்கு |

**குறுஞ்செய்தி :**

வரும் 28ம் தேதியன்று ஒருசில இடங்களில் மிகலேசான மழையும் சூலை 1ம் தேதியன்று லேசான மழையும் பெய்வதற்கான வாய்ப்பு உள்ளது. வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 14 முதல் 16 கி.மீ. வேகத்தில் காற்று வீசக்கூடும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள்: பருத்தி, காய்கறி பயிர்கள்**

பருத்தியைத் தாக்கும் அசுவிணி, இலைப்பென், தத்துப்பூச்சி, வெள்ளை ஈ ஆகிய சாறு உறிஞ்சும் பூச்சிகளை கட்டுப்படுத்த மஞ்சள் ஒட்டும்பொறிகளை ஏக்டருக்கு 12 என்ற வீதம் பயிர்களுக்கு மேல் ஒரு அடி மேலே வைத்து கண்காணிக்க வேண்டும். வேப்ப எண்ணை 0.5 சதவீதக் கரைசல் அல்லது வேப்பம் பருப்பிலிருந்து பெறப்பட்ட சாறு 5 சதவீதம் தெளிப்பதால் வெள்ளை ஈ பெருக்கத்தையும் கட்டுப்படுத்தலாம்.

தற்போது நிலவும் தட்பவெப்பசூழ்நிலையில் காய்கறிப்பயிர்களில் சாறு உறுஞ்சும் பூச்சிகளான தத்துப்பூச்சி, இலைப்பென் வெள்ளை ஈ மற்றும் பலவகையான மாவுப்பூச்சிகளின் நடமாட்டம் அதிகமாக வாய்ப்புள்ளது. இவற்றை 1 ஏக்கருக்கு 5 மஞ்சள் ஒட்டும் பொறி வைத்து கண்காணிக்கலாம். தேவைப்படின் வேப்பங் கொட்டைச்சாறு 5 சதம் அல்லது மீன் எண்ணை சோப் 25 கிராம் ஒரு லிட்டர் தண்ணிரில் கலந்து தெளிக்கலாம்.